

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 17-05-2023

# கர்நாடகாவும் வழிகாட்டியது 1

இந்தியாவின் அரசியல் திசையை தீர்மானிக்க கர்நாடகாவும் வழிகாட்டி விட்டது. அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் இந்திய நாட்டின் நாடாளுமன்றத் தேர்தல் முடிவானது எப்படி அமைய வேண்டும் - எப்படி அமையப் போகிறது என்பதை வழிகாட்டி விட்டது கர்நாடக அரசியல் தேர்தல்.

ஒரு மாநில சட்டமன்றத் தேர்தலுக்கு அதன் முடிவுக்கு இந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியுமா? கொடுக்க வேண்டுமா என்று யாராவது கேட்கலாம். இந்தச் சட்டமன்றத் தேர்தலுக்கு பா.ஜ.க. எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோ அந்தளவுக்கு அதன் முடிவுக்கும் முக்கியத்துவம் தந்தாக வேண்டும்.

கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதை தனது மானப்பிரச்சினையைப் போல பிரதமர் நரேந்திரமோடி காட்டிக் கொண்டார். 'கர்நாடக மக்களின் கனவுகள் எனது கனவுகள். அவர்களின் தீர்மானமே எனது தீர்மானம்' என்று பேசினார் பிரதமர். 'உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உள்ள இந்தியா முதல் மூன்று இடங்களுக்குள் வர வேண்டுமானால் கர்நாடகாவின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே சாத்தியமாகும்' என்று சொல்லிக் கொண்டார். பத்துகிலோ மீட்டர் சாலையில் 'ரோடு ஷோ' பிரச்சாரம் செய்தார் பிரதமர் மோடி.

இது போன்ற 28 ரோடு ஷோக்களை பா.ஜ.க. செய்தது. 33 பேரணிகளை நடத்தியது. ஏழு நாட்கள் கர்நாடகாவில் பிரச்சாரம் செய்தார் மோடி.

அமித்ஷா, ராஜ்நாத்சிங், நிர்மலா சீதாராமன், பிரகலாத் ஜோஷி, நிதின் கட்கரி, தர்மேந்திரபிரதான் ஆகிய ஒன்றிய அமைச்சர்கள் அங்கேயே இருந்தார்கள். உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகியை அழைத்து வந்தார்கள். நட்டா இங்கேயே இருந்தார். இன்னும் உள்ளூரில் விலை போகாததுகள் பலதும் அங்கே இறக்கிவிடப்பட்டன.

**வகுப்புவாதத்தை மொத்தமாக பட்டவர்த்தனமாக பிரச்சாரத்தில் பயன்படுத்தியது பா.ஜ.க. குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். கல்வி நிலையங்களில் ஹிஜாப்புக்கு விதிக்கப்பட்ட தடையை நியாயப்படுத்தி பேசினார்கள். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக துணிச்சலாக இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது. பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவோம் என்று அறிவித்தார்கள். 'காங்கிரசுக்கு வாக்களித்தால் மதக்கலவரம் செய்வார்கள்' என்று உள்துறை அமைச்சரே பேசினார். 'வாக்களித்துவிட்டு ஜெய் பஜ்ரங்பலி என்று முழக்கமிடுங்கள்' என்று இந்த நாட்டின் பிரதமரே பேசினார். 'எங்களுக்கு ஒரு இசுலாமியர் வாக்கு கூட தேவையில்லை' என்று பா.ஜ.க. தலைவர் ஈஸ்வரப்பா வெளிப்படையாகச் சொன்னார். 'திப்பு சுல்தான்களின் ஆதரவாளர்களை எதிர்த்துத்தான் இந்த தேர்தல்' என்று சொன்னார் சி.டி.ரவி. இவை அனைத்தையும் தாண்டி, 'தி கேரளா ஸ்டோரி' படத்தை ஆதரித்து பிரதமரே மேடைகளில் பேசினார்.**

இந்தி திரைப்பட இயக்குனர் சுதிப்தோ சென் கதை எழுதி இயக்கி இருக்கும் திரைப்படம் 'தி கேரளா ஸ்டோரி'. கேரளாவை சேர்ந்த ஏராளமான பெண்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு தீவிரவாத செயலில் ஈடுபடுத்தப்படுவது போல் காட்சிகள் உள்ள படம் அது. மிகக்கடுமையான எதிர்ப்பை சந்தித்த படம் அது. அதனை வெளிப்படையாக பிரதமர் ஆதரித்து பேசினார்.

பல்லாரியில் பேசிய பிரதமர், "கேரளா என்பது கடின உழைப்பாளிகள் மற்றும் திறமையானவர்கள் கொண்ட மாநிலமாகும். இங்கு அறிவார்ந்த மக்கள் உள்ளனர். இத்தகைய அழகிய கேரளா மாநிலத்தில் தீவிரவாதம் எப்படி ஊடுருவுகிறது என்பதை காட்ட 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் முயற்சிக்கிறது. ஆனால் இந்தத் திரைப்படத்துக்கு தடை செய்து தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் முயற்சிக்கிறது. இதுபோன்ற விஷயங்களை தடை செய்யவும், நாட்டின் வளர்ச்சியை புறக்கணிக்க மட்டுமே காங்கிரஸ் கட்சிக்கு தெரியும்.

தீவிரவாதம் தற்போது புதிய வடிவத்தை கையில் எடுத்துள்ளது. ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளைப் பயன்படுத்துவதைத் தவிர சமூகத்தை உள்ளிருந்து பிரித்தாள்வதற்கான வேலையை செய்கிறது. 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் தீவிரவாதத்தின் புதிய முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது தீவிரவாத அமைப்புகள் முன்பு மண்டியிட்டு இருந்தது. இதனால் நீண்டகாலமாக வன்முறையால் பாதித்தோம். மேலும் தீவிரவாதத்தில் இருந்து இந்த நாட்டை காங்கிரஸ் ஒருபோதும் பாதுகாக்கவில்லை. இத்தகைய சூழலில் கர்நாடகத்தை காங்கிரஸால் பாதுகாக்க முடியுமா?" என்றார்.

**கேரளா ஸ்டோரி படத்துக்கும் கர்நாடகாவுக்கும் என்ன தொடர்பு? சில நாட்களுக்கு முன்னால் குஜராத் பெண்கள் பற்றி ஒரு தகவல் வெளியானது.**

**குஜராத் மாநிலத்தில், 5 ஆண்டுகளில் 41 ஆயிரத்து 621 பெண்கள் மாயமாகியுள்ளனர்.**

**2016 ஆம் ஆண்டு 7,105 பெண்களும் -**

**2017 ஆம் ஆண்டு 7,712 பெண்களும் -**

**2018 ஆம் ஆண்டு 9,246 பெண்களும் -**

**2019 ஆம் ஆண்டு 9,268 பெண்களும் -**

**2020 ஆம் ஆண்டு 8,290 பெண்களும் காணாமல் போயுள்ளனர். அதாவது 5 ஆண்டுகளில் மொத்தம் 41 ஆயிரத்து 621 பெண்கள் மாயமாகி உள்ளனர். இந்தத் தகவல்கள், என்.சி.ஆர்.பி. எனப்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட உண்மைத் தகவல். இதுதான் 'குஜராத் மாடல்' ஆட்சியில் லட்சணம் ஆகும்!**

அந்த மாநிலத்தில் 2019-20 ஆண்டில் அகமதாபாத்திலும், வதோதராவிலும் 4,722 பெண்கள் காணாமல் போயுள்ளதாக 2021-ம் ஆண்டு மாநில சட்டமன்றத்திலேயே அறிவிக்கப்பட்டது. இதுதான் 'குஜராத் மாடலின்' குரூரமான நிலைமை ஆகும். இதைப் பற்றி எல்லாம் குஜராத்தை சேர்ந்த பிரதமர் மோடியோ, உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ கவலைப்படுவதும் இல்லை. இதுதான் குஜராத் மாடலின் உண்மை முகம் ஆகும். இத்தகைய குஜராத் ஸ்டோரியைப் பற்றி அவர் கர்நாடகாவில் பதில் சொல்லவில்லை.

**இது, 'தி ரியல் குஜராத் ஸ்டோரி' என்ற நிஜப்படமாக ஓடிக் கொண்டு இருக்கிறது. அதனால் பிரதமர் உள்ளிட்டவர்கள் ஓட்டிய 'கேரளா ஸ்டோரி' கர்நாடகாவில் பிளாப் ஆனது.**

**தொடரும்**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.05.2023) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளை வாங்க அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதற்கட்டமாக 7 தூய்மைப் பணியாளர்களுக்கு ஆணைகளை வழங்கி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் துணைத் தலைவர் திருமதி செ. கனிமொழி பத்மநாபன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், த.ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.314.89 கோடியில் கட்டப்பட்ட

# மீன்வளம் – மீனவர் நலத்துறை சார்பில் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மே 17 -**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.314.89 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.05.2023) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 314 கோடியே 89 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், மீன் இறங்குதளங்கள், மீன் வளர்ப்புக்குளங்கள், பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டடங்களை திறந்து வைத்தார்.

மீன் வளத்தை பாதுகாத்தல், நிலையான மீன்பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**மீன்பிடி துறைமுகம்!**

அந்த வகையில், கடலூர் மாவட்டம், முதுநகரில் 100 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், சி.புதுப்பேட்டையில் உள்ள மீன் இறங்குதளத்தில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக் கூடம், வலைபின்னும் கூடம், மீன் உலர்தளம் மற்றும் சாலை வசதி, லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சினை மீன் குளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், கடலூரில் 5 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் மற்றும் பயிற்சி மையக் கட்டடம்;

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு மீன் இறங்குதளத்தில் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள டி ஜெட்டிகள் மற்றும் மீன் ஏலக்கூடங்கள் மற்றும் ரோச்மா நகரிலுள்ள மீன் இறங்குதளத்தில் 9 கோடியே 91 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான நேர்கல் சுவர் மற்றும் மீன் ஏலக்கூடம்;

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் 120 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம்; கன்னியாகுமரி மாவட்டம், மேலமணக்குடி கிராமத்தில் 29 கோடியே 50 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம்;

தூத்துக்குடி மாவட்டம், ஜீவா நகர் (திருச்செந்தூர்) கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம், இனிகோ நகர் மீனவர் குடியிருப்பில் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம், சாலை வசதியுடன் கூடிய மீன் இறங்குதளம் மற்றும் ஆலந்தலை கிராமத்தில் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம், சாலை வசதியுடன் கூடிய மீன் இறங்குதளம்;

**மீன் விதைப் பண்ணை!**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் நீர் வழங்கல் ஏற்பாடுகளுடன் கூடிய நவீனபடுத்தப்பட்ட மாநில மீன் விதைப் பண்ணை; ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் 3 கோடியே 68 இலட்சம் ரூபாயில் மேம்படுத்தப்பட்ட அரசு மீன் பண்ணை; தென்காசி மாவட்டம், ராமநதி அரசு மீன்பண்ணையில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சினைமீன் குளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்;

என மொத்தம் 314 கோடியே 89 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளம், மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு. பழனிசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரா.மாரிமுத்து தலைமை! தொகுதி பொறுப்பாளர் ரஞ்சன்துரை பங்கேற்பு!

# நாகை நகர தி.மு.க. சார்பில் சாதனை விளக்க பொதுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், மதுரை ரம்ஜான்பேகம் சிறப்புரை!

நாகை, மே 17 -

நாகை நகர தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நாகை அபிராமி திருவாசலில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு நகரச் செயலாளரும், நகர் மன்றத் தலைவருமான இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார். தொகுதி பொறுப்பாளரும், சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ரஞ்சன்துரை, மாவட்டப் பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், நகரக் கழக அவைத்தலைவர்இரா. முருகையன், மாவட்ட பிரதிநிதி ரமணி, நகரக் கழக துணைச் செயலாளர்கள் பி.திலகர், சித்திரா குலோத்துங்கன், பொருளாளர் அபுபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்டச் செயலாளரும், தமிர்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர் மதுரை ரம்ஜான்பேகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எஸ்.கே.ஜி.சேகர், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பெ.முருகானந்தம், தொ.மு.ச. சோ.காந்தி, நகர கழகம் செல்வம் நாட்டார், ஆர். ஆர்.குலோத்துங்கன், எஸ். எம்.ஏ.கணேசன், மாவட்ட மற்றும் நகர சார்பு அணி நிர்வாகிகள் அ.வீரப்பாண்டியன், எஸ்.பால்ராஜ், திருப்பதிவெங்கடாசலம், இரா. தங்கதுரை, விமல்மொக்கை, ஆர்.பண்டி, கருப்பாயி, ப.ராஜா, ஆர்.கே.ப்ரதீப், எஸ்.செல்வா, நாகை நகர் மன்ற உறுப்பினர்கள் ஜுலை காபீவிஅபுபக்கர், கலா பாலு, எம்.ஜாகீர்உசேகன், ப.ஞானமணி, சுந்தரேஸ்வரி கணேசன், சத்தியவாணி கணேசன், செல்வராணி தமிழ்ச்செல்வன், அமுதா மோகன், ஆர்.முகுந்தன், த.கமலநாதன், டி.பீரதீப், எம்.சுரேஷ், நாகை நகர வார்டுக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் நாகை நகர துணைச் செயலாளர் வெற்றிலை கடை சிவா நன்றி கூறினார்.




திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு மாநகரம், அண்ணா காலனி பகுதி கழகத்தின் சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியின் 2ம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரச் செயலாளர் ந.தினேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் மின்னல் அ.நாகராஜ், கொ.ராமதாஸ், மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், துணைச் செயலாளர் வழக்கறிஞர் சி.கே.நந்தினி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.விஸ்வநாதன், க.பால்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சரவணன் நம்பி, ப.குணராஜ், மாமன்ற உறுப்பினர் வே.ராதாகிருஷ்ணன், சிவபாலன், செ.திலகராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.